
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1255

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

167

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த எஸ்.வி.சக்கரை மைதீன் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# எஸ்.வி.சக்கரை மைதீன், 'தங்கத்தைப் போல புடம் போட்ட கொள்கை வீரர்!'

ஓவியம் : ரவி பேலட்



தனது இளமைக் காலந்தொட்டே தந்தை பெரியாரின் கொள்கையை ஏற்று, திராவிடர் கழகத்தின் பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்பிவந்தவர், எஸ்.வி.சக்கரை மைதீன். திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தைச் சேர்ந்தவர். கழகத்தின் மூத்த முன்னோடிகள் சாதிக் பாட்சா, மதியழகன், உடுமலை நாராயணன் உள்ளிட்டோருடன் இணைந்து உடுமலை, தாராபுரம் பகுதிகளில் கழகம் வளர்த்த தொடக்ககால முன்னோடி. தாராபுரம் கழகத்தின் 'தங்கத்தைப் போல புடம் போட்ட கொள்கை வீரர்' என கலைஞர் போற்றிய உடன்பிறப்பு.

1927-ஆம் ஆண்டில், தாராபுரம் கொளிச்சுவாடியில் பிறந்தவர். பெற்றோர் வெள்ளையப்பா ராவுத்தர் - ரவுசன் பீவி. சக்கரை மைதீன் அவர்களின் தந்தை நிலச்சுவான்தார் என்பதால், அப்பகுதியில் செல்வாக்குப் பெற்றவராக இருந்தார். அமராவதி ஆற்றுப்பாலம் கட்டுவதற்கு முன், பரிசல் குத்தகைக்காரராக இருந்தவர். சக்கரை மைதீன் 5-ஆம் வகுப்பு வரை படித்துவிட்டு, தந்தையுடன் தொழில் செய்துவந்த நிலையில், திராவிட இயக்கச் சிந்தனைகளைப் பின்பற்றத் தொடங்கினார்.

தந்தை பெரியார், பட்டுக்கோட்டை அழகிரி ஆகியோரின் உரைவீச்சுகளில் ஈடுபாடு கொண்டவர், அன்று அப்பகுதியில் திராவிட இயக்கத்தின் செல்வாக்கு கொண்டிருந்த கணியூர் குடும்பத்தின் ஓர் உறுப்பினராகவே இருக்கத் தொடங்கினார். தாராபுரம் நகரில், பெரியார் கலந்துகொள்ளும் கூட்டங்களை ஏற்பாடு செய்திருக்கிறார். பகுத்தறிவுக் கொள்கையில் அவர் கொண்டிருந்த உறுதிக்கேற்ப, தனது துணைவியார் அமீனம்மாள் அவர்களை, அப்போதே மத மறுப்பு மணம் செய்தவர். குறிப்பாக, 'பெரியாரைப் பின்பற்றத் தொடங்கிய நாளில் இருந்து, பள்ளிவாசல் தொழுகைக்கும் அவர் சென்றதில்லை' என்பார்கள்.

### பெரியார் பொதுக்கூட்டம்

தாராபுரம் நகரத்தில், பொதுக்கூட்டம் நடத்த தந்தை பெரியாரிடம் தேதி வாங்குவதற்காக, அப்பகுதியில் உள்ள இராமநாதன் ஐயர் இல்லத்தில் உள்ள தொலைபேசி வழிதான் பேசுவாராம் சக்கரை. கூட்டம் முடிந்த பின்னர், 'எங்களைத் திட்டுவதற்கு, எனது வீட்டிலிருந்தே பேசுறீங்க' என அவ்வீட்டினர் உரிமையுடன் கோபித்துக் கொள்வார்களாம்.

1949-இல் திராவிடர் கழகத்தில் இருந்து பிரிந்தவர்கள் தனிக் கழகம் கண்டபோது, தந்தை பெரியாரின் தீவிர தொண்டராக இருந்த சக்கரை அவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். கருப்பு சிவப்பு கரை போட்ட வேட்டி, கருப்புத் துண்டு என்கிற அடையாளத்துடனே இருந்தார். பட்டிதொட்டியெங்கும் கழகக் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்த இவர், ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகமாக இருந்தபோது, வட்டச் செயலாளராகப் பணியாற்றினார். சாதிக் பாட்சா, மதியழகன் ஆகியோரின் சமகால அரசியல் தோழமையாகச் செயல்பட்டவர்.

பேரறிஞர் அண்ணா கொங்கு மண்டலத்திற்குச் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் போதெல்லாம், சக்கரை மைதீன் போன்ற தீவிர தொண்டர்கள் முன்னின்று கூட்டங்களை ஒருங்கிணைத்தனர். 1961-ஆம் ஆண்டில், உடுமலை நகரத்தில் கழக முன்னோடி சாதிக் பாட்சா தலைமைதாங்க, நாகூர் ஹனிபா குழுவினரின் இன்னிசைக் கச்சேரியைப் பொறுப்பேற்று நடத்தி, கழகப் பிரச்சாரத்தை மேற்கொண்ட குறிப்புகள் உள்ளன.

இந்தித் திணிப்பு எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர். 'மிசா' நெருக்கடிநிலைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

> **"இந்தி எதிர்ப்பு மாநாடாக நடைபெற்றபோது, மாநாட்டு அரங்கிற்கு சக்கரை மைதீன் அரங்கம் எனப் பெயர் சூட்டி பெருமை சேர்த்தார் கலைஞர்."**

கழகத்தில் தீவிரமாகச் செயல்பட்டு வந்த வேளையில், திராவிடர் கழகத்தினரோடும் நெருங்கிய நட்பும் தோழமையும் கொண்டிருந்தார் சக்கரை அவர்கள். தந்தை பெரியாரும் அன்னை மணியம்மையாரும் தாராபுரம் வழியாகச் செல்லும்போது, சக்கரை மைதீன் அவர்கள் வீட்டில் ஓய்வு எடுத்து விட்டுச் செல்வது வழக்கம். பெரியார் எப்போது வந்தாலும், நள்ளிரவாக இருந்தாலும் அய்யாவிற்கு ஆர்வத்துடன் சமைத்து பரிமாறுவார் சக்கரை மைதீன். "எனது அம்மா, அமீனம்மா அவர்கள் சமைக்கும் இட்லி,கோழிக் குழம்பு போன்ற உணவுகள் மீது அய்யாவுக்கும், மணியம்மை அன்னைக்கும் எப்போதும் ஒரு பிரியம். அப்படி ஒரு சமயம் எங்கள் இல்லத்திற்கு வருகை தந்தபோது அன்னை மணியம்மையார் என்னை மடியில் அமர்த்திக்கொண்டார்" என்று தனது நினைவுகளைப் பகிர்கிறார், சக்கரை அவர்களின் மகனும் திருப்பூர் மாவட்டக் கழகத்தின் தொண்டர் அணித் தலைவருமான சாகுல் அமீது அவர்கள்.

### சாதிக்பாட்சா நட்பு

1967-ஆம் ஆண்டில், தாராபுரம் சட்டமன்ற உறுப்பினராக இருந்த பழனியம்மாள் அவர்களைக் கழக அரசியலுக்குக் கொண்டு வந்து, அவரை வெற்றிபெறவைக்க அரும்பாடுபட்டவர். பழனியம்மாள் அவர்களின் தந்தை, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். சக்கரை மைதீன் அவர்களைத் திட்டுவதற்காகவே பொதுக்கூட்டம் போட்ட வரலாற்றுக் கதைகளும் அவர் வரலாற்றில் உள்ளன.

கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இரண்டாவது முறை பொறுப்பேற்றபோது, தாராபுரம் நகரில் பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார், அன்றைய நகரக் கழகப் பொருளாளர் சக்கரை மைதீன். கூட்டத்தில் உரையாற்றிய சாதிக் பாட்சா அவர்கள், சக்கரை மைதீன் அவர்களின் தேர்தல் பிரச்சாரப் பணிகளை வெகுவாகப் புகழ்ந்து குறிப்பிட்டார்.

சாதிக்பாட்சா அவர்கள் அமைச்சராக, தலைமைக் கழகப் பொருளாளராக சென்னையில் இருந்தபோதும் சக்கரை அவர்களிடம் நல்ல தோழமை கொண்டிருந்தார். சாதிக்பாட்சா அவர்களின் சகோதரியின் இல்லம் தாராபுரத்தில் இருந்ததால், அங்கு வரும் ஒவ்வொரு முறையும் சக்கரை அவர்களைச் சந்தித்து, அரசியல் பேசிச் செல்வார். 1976-ஆம் ஆண்டு ஆட்சிக் கலைப்புக்குப் பின்னர், தமிழ்நாடு முழுவதும் கலைஞர் பயணித்தபோது, தாராபுரம் வழியாகச் செல்கையில், சக்கரை அவர்களின் இல்லத்துக்கு வந்து, அவரைப் பார்த்துச் சென்றுள்ளார்.

பெரியார், அண்ணா, கலைஞரின் வழிவந்த தொண்டராக, கழகப் பணியாற்றிய சக்கரை அவர்கள், உடல்நலக் குறைவால் எதிர்பாராத வகையில், 08.07.1987 அன்று இயற்கை எய்தினார். 'தாராபுரத்தில் கழகம் வளர்த்த தளகர்த்தரே' என இரங்கல் கடிதம் எழுதினார் கலைஞர். 1993-ஆம் ஆண்டில் கோவையில் நடைபெற்ற கழகத்தின் ஏழாவது மாநில மாநாடு, இந்தி எதிர்ப்பு மாநாடாக நடைபெற்றபோது, மாநாட்டு அரங்கிற்கு சக்கரை மைதீன் அரங்கம் எனப் பெயர் சூட்டிப் பெருமை சேர்த்தார் கலைஞர். அவர் மறைந்து 36 ஆண்டுகளைக் கடந்தும் தாராபுரம் கழகத்தினர் அவரை நினைவு கூர்கின்றனர். ஏனென்றால், கழகத்தின் வேராக நின்றவர்களைக் கழகத் தலைமுறையினர் மறப்பதில்லை.

...துடிக்கும்

## பறிபோகும் உரிமைகள்!

த.வெ.க. அரசு, தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்த சில வாரங்களிலேயே ஒன்றிய பா.ஜ.க. அரசின் மிரட்டலுடன்கூடிய அழுத்தங்களுக்குப் பயந்து, தமிழ்நாட்டு உரிமைகளை விட்டுக் கொடுத்து வருவதாக, முனைவர் குமரவேல் என்பவர் முகநூலில் பட்டியலிட்டுள்ளார்.

1. ஒன்றிய அரசு உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தம் செய்து, தமிழ்நாட்டிற்கான பங்கை 99 இலட்சம் டன் அரிசி மற்றும் கோதுமையிலிருந்து 66 இலட்சம் டன் அரிசி மற்றும் கோதுமையாக மாற்ற முடிவு. இதனால், ரேஷன் கடைகளில் அரிசி வாங்கும் மக்கள் பாதிக்கப்படுவார்கள். மேலும், தமிழ்நாடு அரசுக்குக் கூடுதலாக ரூ.9 ஆயிரம் கோடி செலவாகும். மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. ஆட்சி இருந்தவரை, இந்தச் சட்டத்துக்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் கொடுக்கவில்லை.

2. நெய்வேலி என்.எல்.சி.யில் உள்ள ஒன்றிய அரசின் பங்குகளில் இருந்து மூன்று சதவிகிதத்தை விற்றிருக்கிறார்கள். கடந்த காலங்களில் இதுபோன்ற சூழல் வரும்போது, அப்போதைய தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. அரசுகள் அந்தப் பங்குகளை வாங்கி, மாநில உரிமைகளைப் பாதுகாத்தன. ஆனால் இப்போது, நேரடியாகப் பங்குகள் தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டிருக்கிறது.

3. மகாத்மா காந்தி ஊரக 100 நாள் வேலை திட்டம் முழுமையாக மாற்றம் செய்யப்பட்டு, மகாத்மா காந்தி பெயரை நீக்கி, வாயில் நுழையாத பெயரையும் வைத்து, தமிழ்நாட்டு அரசுக்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைத்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு. இதனால், தமிழ்நாடு அரசுக்குக் கூடுதலாக 5 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும். மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு இருக்கும் வரை, இந்த மாற்றத்திற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் கொடுக்கவில்லை.

4. முந்தைய தி.மு.க. அரசு காலத்தில் போராடி நிறைவேற்றப்பட்ட மாநில அரசின் பல்கலைக்கழகங்களில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசே துணைவேந்தர்களை நியமிக்கும் சட்டத்தை நீர்த்துப்போகவைத்து, ஒன்றிய அரசின் வழிகாட்டுதலின்படி, யு.ஜி.சி. (UGC) அமைப்பின் பிரதிநிதியைச் சேர்த்துக்கொண்டு, துணைவேந்தரை நியமிக்கும் குழுவை அமைக்க த.வெ.க. அரசு முடிவுசெய்து, தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணத்தில் நடக்கும் மாநில அரசின் பல்கலைக்கழகங்களை, ஒன்றிய நிறுவனங்களின் கையில் ஒப்படைக்கும் ஆபத்தான நடவடிக்கையில் ஈடுபட்டு இருக்கிறது.

இப்படித் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டின், தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை அடகுவைக்கும் செயல்களில் மாநில த.வெ.க. அரசு ஈடுபட்டிருக்கிறது' எனப் பதிவிட்டுள்ளார். எல்லாவற்றையும் மக்கள் கவனித்துக்கொண்டிருக்கின்றனர்.

## ஃப்ளாஷ்பேக்

### தலைவருடன் எடுத்துக் கொண்ட புகைப்படம்!



ப.பிரகாஷ்

2012-ஆம் ஆண்டில், திருவல்லிக்கேணி பகுதி இளைஞர் அணி அமைப்பாளராக இருந்தபோது, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களோடு எடுத்துக் கொண்ட புகைப்படம். மாவட்ட, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களைச் சந்தித்து, குழுப் புகைப்படம் எடுப்பதற்காகத் தலைவர் அழைத்திருந்தார். தலைவரைச் சந்தித்த மகிழ்ச்சி, இப்போதும் அதே உற்சாகத்துடன் இயங்க வைத்துக்கொண்டிருக்கிறது.



**- ப.பிரகாஷ், வழக்கறிஞர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நறுக்கு

### தி.மு.கழகத்தின் இலட்சியம்!

1953-ஆம் ஆண்டு, மும்முனைப் போராட்டத்தின் போது, பேரறிஞர் அண்ணா உள்பட கழகத்தின் மூத்த தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டனர். சென்னை மாகாண நீதிபதி, தனது தீர்ப்பில், "குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்கள் மீது, பொதுமக்கள் பெருமதிப்பு கொண்டுள்ளனர். வகுப்புகளற்ற- சாதிகளற்ற சமுதாயத்தை அமைக்கப் பாடுபடுகின்றனர். தி.மு.கழகத்தின் இலட்சியங்களைப் பற்றியோ, அதன் உறுப்பினர்கள் ஆற்றியுள்ள பணிகள், நெறிமுறைகள் பற்றியோ முடிவு கூறுவது என் வேலையல்ல" என்று குறிப்பிட்டிருந்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900